# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for Prosecution PW1 (Lw1)
Defence
Court

| | |
|---|---|
| Name | அருண்மொழி |
| Father/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் செந்தமிழ் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் வலங்கைமான் பாடைக்கட்டி மாரியம்மன் கோவில் அருகே செல்போன் சர்வீஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 17ம் வருடத்தில் ஒருநாள் நான் கோவில் அருகே நின்றுகொண்டிருந்தபோது போனில் என்னை சில நபர்கள் மிரட்டுவதாக வலங்கைமான் போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் டைப் செய்யப்பட்டுள்ள விவரம் என்ன என்று எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. எதிரிகள் என்னை விரட்டவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலீஸ் விசாரணையில் கடந்த 18.05.2017 ம் தேதி மாலை 6.45 மணியளவில் 9003976221 என்ற செல்போன் எண்ணிலிருந்து 1வது எதிரி குபேரன் போன் செய்து என்னிடம் பேசவேண்டும் என்று சொன்னார் என்றும், அவர் கூறியது போல் தில்லையம்பூர் ரோடு பெரம்பனார் கோவில் அருகே தனியாக நின்றுகொண்டிருந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த எதிரிகள் குபேரன், வினோத் எதிரிகள் இருவரும் எங்களை யார் என்று தெரிகிறதா என்று கேட்டார்கள் என்றும், நாங்கள் வலங்கைமானில் தொடர் கொலைகளை செய்து வருகிறோம் என்றும், வலங்கைமானில் தொழில் நடத்த வேண்டுமென்றால் எங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் தரவேண்டும் என்றும் இல்லையென்றால் என்னை கொலை செய்து விடுவார்கள் என்று கூறினார்கள் என்றும் நான் அவர்களிடம் பணம் ஏதுமில்லை என்று கூறியபோது உனது குழந்தையை கடத்தி கொன்றுவிடுவேன் என் பின்னால் பெரிய டீமே உள்ளது என்றும், இதுசம்மந்தமாக போலீசாரிடம் உன் குடும்பத்தையும் அழித்துவிடுவேன் என்று கூறினார்கள் என்றும் நான் அவர்களிடம் 10 நாட்கள் கெடு வாங்கி வந்துவிட்டேன் என்றும், மேலும் 29.05.2017 ம் தேதி காலை9.15 மணியளவில் எதிரி குபேரன் தொலைபேசியில் என்னை மிரட்டினார் என்றும், இது தொடர்பாக நான் போலிசில் புகார் கொடுத்தேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for Prosecution PW2 (Lw2)
Defence
Court

| | |
|---|---|
| Name | செல்லையன் |
| Father/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் செந்தமிழ் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தலைமையாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா1 எனது மகன் ஆவார். அவருடன் தான் நான் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலீஸ் விசாரணையில் கடந்த 18.05.2017 ம் தேதி மாலை 6.45 மணியளவில் 9003976221 என்ற செல்போன் எண்ணிலிருந்து 1 வது எதிரி குபேரன் எனது மகனுக்கு போன் செய்து தன்னிடம்

பேசவேண்டும் என்று சொன்னார் என்றும், அவர் கூறியது போல் தில்லையம்பூர் ரோடு பெரம்பனார் கோவில் அருகே எனது மகன் தனியாக நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த எதிரிகள் குபேரன், வினோத் எதிரிகள் இருவரும் எங்களை யார் என்று தெரிகிறதா என்று எனது மகனிடம் கேட்டார்கள் என்றும், நாங்கள் வலங்கைமானில் தொடர் கொலைகளை செய்து வருகிறோம் என்றும், வலங்கைமானில் தொழில் நடத்த வேண்டுமென்றால் எங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் தரவேண்டும் என்றும் இல்லையென்றால் எனது மகனை கொலை செய்து விடுவதாக கூறினார்கள் என்றும் எனது மகன் அவர்களிடம் பணம் ஏதுமில்லை என்று கூறியபோது கடத்தி கொன்றுவிடுவேன் என் பின்னால் பெரிய டீமே உள்ளது என்றும், இதுசம்மந்தமாக போலீசாரிடம் கூறினால் உன் குடும்பத்தையும் அழித்துவிடுவேன் என்று கூறினார்கள் என்றும் எனது மகன் அவர்களிடம் 10 நாட்கள் கெடு வாங்கி வந்துவிட்டார் என்றும், இந்நிலையில் கடந்த 29.05.2017 ம் தேதி காலை 9.15 மணியளவில் எதிரி குபேரன் தொலைபேசியில் எனது மகனுக்கு கொலை மிரட்டினார் என்றும், இது தொடர்பாக எனது மகன் போலிசில் புகார் கொடுத்தார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for Prosecution PW3 (Lw3)
Defence
Court

Name சுகுனா

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் செந்தமிழ் நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலீஸ் விசாரணையில் கடந்த 18.05.2017 ம் தேதி மாலை 6.45 மணியளவில் 9003976221 என்ற செல்போன் எண்ணிலிருந்து 1வது எதிரி குபேரன் எனது கணவருக்கு போன் செய்து தன்னிடம் பேசவேண்டும் என்று சொன்னார் என்றும், அவர் கூறியது போல் தில்லையம்பூர் ரோடு

பெரம்பனார் கோவில் அருகே எனது கணவர் தனியாக நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த எதிரிகள் குபேரன், வினோத் எதிரிகள் இருவரும் எங்களை யார் என்று தெரிகிறதா என்று எனது கணவரிடம் கேட்டார்கள் என்றும், நாங்கள் வலங்கைமானில் தொடர் கொலைகளை செய்து வருகிறோம் என்றும், வலங்கைமானில் தொழில் நடத்த வேண்டுமென்றால் எங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் தரவேண்டும் என்றும் இல்லையென்றால் எனது கணவனை கொலை செய்து விடுவதாக கூறினார்கள் என்றும் எனது கணவர் அவர்களிடம் பணம் ஏதுமில்லை என்று கூறியபோது எனது குழந்தையை கடத்தி கொன்றுவிடுவேன் என் பின்னால் பெரிய டீமே உள்ளது என்றும், இதுசம்மந்தமாக போலீசாரிடம் கூறினால் உன் குடும்பத்தையும் அழித்துவிடுவேன் என்று கூறினார்கள் என்றும் எனது கணவர் அவர்களிடம் 10 நாட்கள் கெடு வாங்கி வந்துவிட்டார் என்றும், இந்நிலையில் கடந்த 29.05.2017 ம் தேதி காலை 9.15 மணியளவில் எதிரி குபேரன் தொலைபேசியில் எனது கணவருக்கு கொலை மிரட்டினார் என்றும், இது தொடர்பாக எனது கணவர் போலிசில் புகார் கொடுத்தார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register          Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for          Prosecution PW4 (Lw4)
Defence
Court

Name          ராஜேந்திரன்

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் கோவில்பத்து நடுத்தெருவில் குடியிருந்து விவசாய வேலை வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலீஸ் விசாரணையில் கடந்த 29.05.2017 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நான் எனது சொந்த வேலையாக வலங்கைமான் செந்தமிழ் நகர் வழியாக சென்றுகொண்டிருந்தபோது வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வலங்கைமான் காவல் நிலையக் குற்ற எண்.

131/2017 இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழான வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் வைரமூர்த்தி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்யவில்லை என்று கூறி உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for Prosecution PW5 (Lw5)
Defence
Court

| | |
|---|---|
| Name | வைரமூர்த்தி |
| Father/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் வரதராஜன் பேட்டை தெருவில் குடியிருந்து டிரைவராக தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. அ.சா.1 ஐ தெரியாது., ஆஜர் எதிரிகளையும் தெரியாது. அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலீஸ் விசாரணையில் கடந்த 29.05.2017 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நான் எனது சொந்த வேலையாக வலங்கைமான் செந்தமிழ் நகர் வழியாக சென்றுகொண்டிருந்தபோது

வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வலங்கைமான் காவல் நிலையக் குற்ற எண். 131/2017 இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழான வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் ராஜேந்திரன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்யவில்லை என்று கூறி உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.ST**C.33 /2021**
Sessions

Deposition of witness for Prosecution PW6 (Additional Witness)
Defence
Court

Name கோ. முத்துக்குமரன், சிறப்பு உதவி ஆய்வாளர்.

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2022

**முதல் விசாரணை** -

நான் வலங்கைமான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வலங்கைமான் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர்கள் ஜெயராமன் மற்றும் ராஜா ஆகியோர்களின் கையெழுத்தையும், கையொப்பத்தையும் நன்கு அறிவேன். அந்த அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியமளிக்கிறேன். வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் கடந்த 29.05.2017 ம் தேதி பணியிலிருந்தபோது அன்றைய தினம் மாலை 18.00 மணிக்கு வலங்கைமான் செந்தமிழ் நகரைச் சேர்ந்த செல்லையன் மகன் அருண்மொழி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று நிலையக் குற்ற எண். 131/2017 இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் அ.த.சா.ஆ.2 ஆகும். அவர் பதிவு செய்த முதல் தகவல்

அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆகும். பின்னர் அன்றைய தினமே இரவு 8.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், வைரவமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் முறையே அ.த.சா.ஆ.4 மற்றும் 5 ஆகும். பின்னர் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் அருண்மொழி, செல்லையன், சுகுனா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மூவரும் மாண்பமை திருவாரூர் மாவட்ட முன்பினையில் சென்றுள்ள விபரம் தெரியவந்ததால் இத்துடன் அவருக்கு பணிமாறுதல் உத்தரவு வந்துவிட்டதால் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ராஜா வசம் ஒப்படைத்துள்ளார். வழக்கு விசாரணையை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ராஜா பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்ததில் அவர்கள் உதவி ஆய்வாளர் ஜெயராமனிடம் கூறிய அதே சங்கதிகளை கூறியதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் அவரது புலன் விசாரணையினை முடித்து எதிரிகள் மீது கடந்த 29.06.2019 ம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 506(1) ன் கீழ இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொல்வது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் அ.சா.1 யிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக சம்பவிடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.